**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC 69/2023** |
| **Sessions** | : | |
| **Deposition of witness for** | : | **Prosecution PW 3 /LW3** |
| **Name** | .. | திரு. செந்தில்குமார் |
| **Father's/Husband's Name** | .. | திரு. வரதன் |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **50** |

**Date: 22/09/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது எண் 1/32 A, CKM நகர், மணலி, மாத்தூர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடைவைத்து நடத்திவருகிறேன். 09.07.2021 அன்று மதியம் 03.00 மணிக்கு பெரியமாத்தூர் கடையில் இருந்த போது சத்தம் கேட்டு வெளியே சென்று பார்த்த போது இசர் வாகனம் கோண்டா இருசக்கர வாகனத்தின் மீது மேதியதில் இருசக்கர

வாகனத்தில் பின்னால் சென்ற பெண்ணிற்கு காலின் மீது ஏறியதில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டது. காயம் பட்ட நபரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். விபத்தினை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தில் ஓட்டுநரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

2.போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தில் பதிவெண் குறித்து தற்போது நினைவில்லை. எதிரியை அடையாளம் காட்ட முடியும் ஆனால் எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜர்இல்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :-

3. சம்பவம் நடந்ததை நேரிடையாக பார்க்கவில்லை என்றாலும் சத்தம் கேட்டு தான் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்க்காத நீங்கள் எதிரியை அடையாளம் காட்ட முடியாது என்றால் சரியல்ல.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.09.22 16:49:25 +0530

**நீதித்துறை நடுவர்,**

**திருவொற்றியூர்**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

**Calendar :**
**Miscellaneous :**
**Preliminary Register : Case No. CC 69/2023**
**Sessions :**
**Deposition of witness for : Prosecution PW 4 /LW4**
**Name ..** திரு. பலராமன்

**Father's/Husband's Name ..** திரு. சியலம்
**Village**
**Taluk ..**
**Caste ..**
**Calling ..**
**Religion ..**
**Age .. 45**

**Date: 22/09/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது எண் 16 , படவாட்டம்மன் கேவில் தெரு, தாழை MMC என்ற முகவரியில் வசித்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாத்தூர் கேன்சர் மருத்துவமனை அருகே போலீசார் கூட்டமாக இருந்தார்கள். என்ன வென்று அருகே சென்று பார்த்த போது போலீசார் விபத்து வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு

வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் கையொப்பமிட்டேன். ,இந் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் முதலாவது கையொப்பம் என்னுடையது. ( **வரைபடம் மற்றும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ. 2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :-

2. போலீசார் எத்தனை எழுதப்படாத பேப்பரில் கையொழுத்து வாங்கினார்கள் என்று தெரியுமா என்றால் எழுதப்பட்ட ஆவணத்தில் தான் நான் கையொப்பமிட்டேன். அதில் என்ன இருந்தது தெரியாது என்றால் போலீசார் சாட்சி கையொப்பம் போடச்சொன்னார்கள். தெரிந்து தான் நான் கையொப்பமிட்டேன்.

3. மகஜர் மற்றும் வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு அங்கு தான் என்னிடம் கையொழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.09.22 16:49:32 +0530

**நீதித்துறை நடுவர்**,

**திருவொற்றியூர்**

Clr.No.19

# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR</u>**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC 69/2023** |
| **Sessions** | : | |
| **Deposition of witness for** | : | **Prosecution PW 5/LW5** |
| **Name** | .. | திரு. முரளி |
| **Father's/Husband's Name** | .. | திரு. லட்சுமணன் |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **35** |

**Date: 22/09/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது எண் 43/25, படவட்டம்மன் கேவில் தெரு, K.K.தாழை MMC என்ற முகவரியில் வசித்து வருகிறேன். 09.07.2021 அன்று இரவு சுமார் 08.00 மணி அளவில் மாதவரத்திலிருந்து மாத்தூர் செல்லும் வழியில் உள்ள பெருமாள் கோவில் அருகே வந்து கொண்டிருந்த போது அங்கு போலீசார் நின்று கொண்டிருந்தார்கள்.

அங்கு விபத்து நடந்து ஒருவர் இறந்து விட்டார் என்றும் அதற்காக வரைபடம் மற்றும் மகஜரில் கையொம்ம்மிட்டேன். ( **மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரில் உள்ளஇரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ. 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :- இல்லை**

2. அ.சா.4ஐ உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். ஏரியாவில் பார்துள்ளேன். சம்பவம் நடந்த போது எத்தனை எழுதப்படாத பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஞாபகமில்லை.

3.ஆவணங்கள் அணைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டு அங்கு தான் வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2025.09.22 16:49:38 +0530

**நீதித்துறை நடுவர்,**

**திருவொற்றியூர்**